DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 361/2019

Prosecution witness – PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.தனிக்கொடி | Caste: | |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

(A1 to A4, A6, A7 present A5 absent. Peititon filed and allowed.)
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of _ 21.01.2025 at 01.15 P.M.

முதல் விசாரணை:–

1. நான் பி.கீரந்தை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா–1 எனது மனைவி.

2. வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் காலை 07.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தேன். ராமசாமி, ராமர் ஆகியோர் நாங்கள் செல்லும் பாதையில் வேலி போட்டு அடைத்தார்கள். அந்த பாதை பொதுப்பாதை ஆகும்.

3. எனது மனைவி சென்று அவர்களிடம் எனது வீட்டிற்கு செல்லும் பாதையை ஏன் வேலி போட்டு அடைத்தீர்கள் என்று கேட்டார். வேலியை அடைக்க பயன்படுத்திய கத்திகம்பால் எனது மனைவியை அடித்தார்கள். ராமசாமியும், ராமரும் கத்திகம்பால் அடித்தார்கள். மற்ற நபர்களான ராஜேஸ்வரி, சவுந்திரம், லெட்சுமி, ராஜகனி, ஆகியோர் கல்லால் எறிந்தார்கள்.

4. எனது மனைவிக்கு முதுகு, காலில் காயம்பட்டது. சம்பவத்தை நான் சண்டையை விலக்கி விட்டபோது கம்பால் லெட்சுமணன் என்பவர் என்னை காலில் அடித்து விட்டார். எனக்கு இடது காலில் காயம்பட்டது. பின்னர் பாதை குறித்து பேசினால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று அருவாளை காட்டி மிரட்டினார்கள்.

5. காயம்பட்ட எனது மனைவியும் நானும் ஆட்டோவில் ஏறி கீழக்கரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். என்னை போலீசார் கீழக்கரை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

குறுக்கு விசாரணை இல்லை.

ஒம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)